இன்றைய செய்தி நாளைய வரலாறு



முரசொலி

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

வியாழக்கிழமை 02-10-2025

# வதந்திகளில் வாழ முடியாது!

நடிகர் விஜய்யின் பொறுப்பற்ற தன்மை காரணமாக 41 உயிர்கள் பலியானது. அதனை மறைக்க பல்வேறு வதந்திகளை ஊடகங்களில் பரப்பி வருகிறார்கள். அதில் முக்கியமானது மின்சாரத்தை துண்டித்தார்கள் என்பது ஆகும்.

**“மின்சாரம் துண்டிக்கப்படவில்லை”** என்று மின் வாரிய தலைமைப் பொறியாளர் ராஜலட்சுமி சொல்லி இருக்கிறார். **“விஜய் பிரச்சாரத்தின் போது மின்சாரம் துண்டிக்கப்படவில்லை. விஜய் வருவதற்கு முன்பு டிரான்ஸ்பார்மரிலும், மரத்திலும் சிலர் ஏறியதால் மின்சாரத்தை துண்டித்து, காவல்துறை மூலம் அவர்களை கீழே இறக்கிய பின்னர் மீண்டும் மின் விநியோகம் செய்யப்பட்டது”** என்று விளக்கம் அளித்துள்ளார்.

காவலர்கள் இல்லை, போலீஸ் பாதுகாப்பு முறையாகச் செய்து தரப்படவில்லை என்பது அடுத்ததாகச் சொல்லப்படுவது ஆகும். விஜய் பேச ஆரம்பித்த போது காவல்துறை சிறப்பான பாதுகாப்பு ஏற்பாடு செய்துள்ளதாகக் கூறி நன்றி தெரிவித்தார். காவல்துறை சரியான ஏற்பாடுகள் செய்யவில்லை என்றால் விஜய் அப்படி சொல்லி இருப்பாரா?

கரூரில் விஜய் வருகைக்கு 10 ஆயிரம் பேரை எதிர்பார்ப்பதாகச் சொல்லி அனுமதி பெறப்பட்டது. கரூர் மாவட்டச் செயலாளர் மதியழகன் கொடுத்த விண்ணப்பத்தில் 10 ஆயிரம் தொண்டர்கள்தான் வருவார்கள் என்று எழுதிக் கொடுத்துள்ளார். ஆனால் பிரச்சாரக்கூட்டத்திற்கு சுமார் 25 ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் வந்தனர். திருச்சி, நாகப்பட்டினம், திருவாரூரில் ஏற்கனவே கூடிய கூட்டத்தை கருத்தில் கொண்டு SP1, ADSP2, DSP4 மற்றும் Inspectors 17 பேர் உள்பட சுமார் 500 காவலர்கள் இருந்தார்கள். பொதுவாக பொதுக்கூட்டத்துக்கு 50 பேருக்கு ஒரு காவலர் என்று நிறுத்தப்படுவார்கள். கரூர் நிகழ்ச்சிக்கு 20 பேருக்கு ஒருவர் என்ற கணக்கில் நிறுத்தப்பட்டார்கள்.

**விண்ணப்பத்தில் மாலை 3 மணி முதல் இரவு 10 மணி வரை நேரம் கேட்டிருந்தனர். ஆனால் அந்தக் கட்சியின் அதிகாரப்பூர்வ தளத்தில் 12 மணிக்கு வருவார் என்று அறிவிக்கப்பட்டது. அதனால் காலை 11 மணி முதல் கூட்டம் கூடியது. ஆனால் இரவு 7.10 மணிக்குத்தான் விஜய் வந்தார். முப்பது நிமிடத்தில் கடக்க வேண்டிய தூரத்தை இரண்டு மணி நேரம் தாமதம் ஆகும் வகையில் மெதுவாகக் கடந்தார் விஜய். இது கூட்டத்தின் எதிர்பார்ப்பை அதிகரித்தது.**

பரப்புரை கூட்டம் நடைபெற்ற வேலுச்சாமிபுரம் என்ற இடம், கரூர் - ஈரோடு சாலையில் அமைந்துள்ளது. அவர்கள் கூட்டம் நடத்த முன்னதாக கேட்ட உழவர் சந்தை மற்றும் லைட்ஹவுஸ் ரவுண்டானா என்ற இரண்டு இடங்களும் இதைவிட குறுகலான இடங்கள் என்பதால் வேலுச்சாமிபுரத்தில் நிகழ்ச்சி நடத்த அனுமதி அளிக்கப்பட்டது. லைட் ஹவுஸ் பகுதியில் பெட்ரோல் பங்க் இருக்கிறது. அமராவதி பாலமும் இருக்கிறது. விஜய் கட்சி கேட்ட இடத்தை கொடுத்திருந்தால் இன்னும் நிலைமை மோசமாகி இருக்கும்.

**வரவேற்பு கொடுத்த இடத்தில் இருந்து அவரது ரசிகர்கள், தொடர்ந்து வாகனத்தை பின் தொடர்ந்து வந்ததால் கூட்டம் அதிகரித்துக் கொண்டே சென்றது. பேச வேண்டிய இடத்துக்குள் நுழைய முடியாத அளவுக்கு கூட்டம் இருப்பதால், பிரச்சார இடத்துக்கு முன்பே வாகனத்தை நிறுத்தி பேசும் படி போலீஸார் கூறியுள்ளனர். ஆனால், அந்த அறிவுறுத்தலை விஜய் தரப்பு ஏற்கவில்லை.**

நீண்ட நேர காத்திருப்பு, போதுமான தண்ணீர் தர மறுத்தது, இயற்கை உபாதைகளுக்கு கூட பொதுமக்களை வெளியில் செல்ல அனுமதிக்காமல் கயிறு வைத்து கட்டி இருந்தது ஆகியவைதான் மூச்சுத்திணறலுக்கு காரணம் ஆகும்.

**சொன்ன இடத்துக்கு சொன்ன நேரத்துக்கு வராதது யார் தவறு? அவரை சொன்ன நேரத்துக்கு வர வேண்டாம் என்று யாராவது தடுத்தார்களா? தடுத்து வைத்திருந்தார்களா? குறிப்பிட்ட இடத்தில் கூட்டம் அதிகமாக இருக்கிறது என்றால் முன்கூட்டியே பஸ் மீது ஏறி வந்திருந்தால் ஆங்காங்கே விஜயை பார்த்தவர்கள் கலைந்துச் சென்று இருப்பார்களே? அப்படி கலைந்து விடக் கூடாது என்பதுதானே அவரது திட்டம். திட்டம் போட்டு சாகடித்து விட்டார்கள்.**

திருச்சியில் இருந்து கரூர் வரை விஜய் வாகனத்தை தொடர்ந்து செல்லுமாறு சில மாவட்ட ரசிகர்களுக்கு கட்டளை பிறப்பிக்கப்பட்டு உள்ளது. அவர்கள்தான் தொடர்ந்து போக்குவரத்தை நிறுத்தி, குழப்பத்தை ஏற்படுத்தி இருக்கிறார்கள். நிகழ்ச்சி நடந்த இடம் கரூராக இருந்தாலும் இங்கு மற்ற மாவட்டங்களில் இருந்தும் ரசிகர்கள் அழைத்து வர வைக்கப்பட்டுள்ளார்கள். உயிரிழந்தோர் பட்டியலில் திண்டுக்கல், ஈரோடு, சேலம், திருப்பூர் ஆகிய மாவட்டங்களைச் சேர்ந்தவர்களும் இருக்கிறார்கள். அப்படியானால் திட்டமிட்டு பல்வேறு மாவட்டங்களில் இருந்து மக்கள் அழைத்து வரப்பட்டிருக்கிறார்கள் கூட்டத்தை அதிகரித்து காட்ட. வெளியூர்க்காரர்கள் எத்தனை மணிக்கு சாப்பிட்டார்களோ தெரியவில்லை?

**சொன்ன நேரத்துக்கு வரவிடாமல் தி.மு.க. தடுக்கவில்லை. இத்தகைய கோரச் சம்பவம் நடந்த பிறகு கரூரை விட்டு அவரை யாரும் விரட்டவில்லை. அவர் இருந்திருக்க வேண்டியதுதானே? ரசிகர்களுக்கு ஆறுதல் சொல்லாதது யார் குற்றம்?**

**இத்தகைய சூழல் அனைத்தையும் உருவாக்கிவிட்டு, அடுத்தவர் மீது பழிபோடுவது உயிர்ப்பலியைப் போலவே கொடூரம் ஆனது ஆகும். பொய் முகத்தால் பிணவாடையை அமுக்க முடியாது.**




கழகத் தலைவர், முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (30.9.2025) சென்னை, அண்ணா அறிவாலயத்தில், “உடன்பிறப்பே வா” என்ற தலைப்பில் சட்டமன்றத் தொகுதி வாரியாக கழக நிர்வாகிகளை சந்திக்கும் நிகழ்வில், திருப்போரூர் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட கழக நிர்வாகிகளை தனித்தனியாக சந்தித்து பேசினார். அப்போது கழக நிர்வாகிகளுக்கு புத்தகத்தையும் வழங்கினார்.

## மன்னார்குடி அரசு மகளிர் கலை, அறிவியல்

# கல்லூரி மாணவிகள் சேர்க்கைக்கான இணையதள விண்ணப்பப் பதிவு தொடக்கம்!

### அமைச்சர் கோவி.செழியன் தகவல்!

*மன்னார்குடி, அக்.2-*

*தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் அறிவிக்கப்பட்டு புதிதாக தொடங்கப்பட்டுள்ள மன்னார்குடி அரசு மகளிர் கலை மற்றும் அறிவியல் கல்லூரி மாணவிகள் சேர்க்கைக்கான இணையதள விண்ணப்பப் பதிவு 1.10.2025 காலை 11.00 மணி முதல் செயல்படும் என உயர்கல்வித் துறை அமைச்சர் முனைவர் கோவி.செழியன் தெரிவித்துள்ளார்.*

*இதுகுறித்து அவர் தெரிவித்துள்ளதாவது:-*

*மன்னார்குடி பகுதியிலிருக்கும் மாணவிகளின் உயர்கல்வி தேவையினை பூர்த்தி செய்ய தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் திருவாரூர் மாவட்டத்தில் நடந்த அரசு விழாவில் மன்னார்குடி நகராட்சியில் அரசு மகளிர் கலை மற்றும் அறிவியல் கல்லூரி புதிதாக அமைக்க அறிவிப்பு வெளியிட்டார்கள். அதற்கிணங்க தற்போது திருவாரூர் மாவட்டம், மன்னார்குடியில் 5 புதிய பாடப்பிரிவுகளுடன் புதிய அரசு மகளிர் கலை மற்றும் அறிவியல் கல்லூரி தொடங்க உரிய அரசாணை வெளியிடப்பட்டுள்ளது.*



*தற்போது முதலமைச்சர் அவர்களின் ஆணைக்கிணங்க, பி.ஏ வரலாறு, பி.காம், பி.எஸ்.சி கணினி அறிவியல், பி.எஸ்.சி நுண்ணுயிரியல் மற்றும் பி.சி.ஏ போன்ற ஐந்து பாடப்பிரிவுகளுடன் மேற்கண்ட புதிய மகளிர் கல்லூரி தொடங்கப்பட்டுள்ளது.*

*அக்கல்லூரியில் மாணவிகள் சேர்க்கை மேற்கொள்ள ஒரு சிறப்பின நேர்வாக 1.10.2025 காலை 11.00 மணி முதல் விண்ணப்பப் பதிவு மேற்கொள்ள முடிவெடுக்கப்பட்டுள்ளது. அதன்படி, இணையதள விண்ணப்பப் பதிவுக்கான WWW.TNGASA.IN என்ற இணைய தள முகவரி 01.10.2025 காலை 11.00 மணி முதல் செயல்படும்.*

*இந்த அரிய வாய்ப்பினை பயன்படுத்தி மாணவிகள் மேற்கண்ட இணைய தள முகவரியில் தங்களது விண்ணப்பங்களை பதிவு செய்து தாங்கள் விரும்பும் பாடப்பிரிவில் சேர்க்கை பெற்று பயன்பெறுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது.*

*இவ்வாறு உயர்கல்வித் துறை அமைச்சர் கோவி. செழியன் தெரிவித்துள்ளார்.*

## ஓசூர் மாநகராட்சி – தருமபுரி – கிருஷ்ணகிரி நகராட்சிகள் – 16 பேரூராட்சிகள் – 20 ஊராட்சி ஒன்றியங்கள் பயன்பெறும் வகையில்

# ரூ. 8,428.50 கோடி மதிப்பில் - ஒகேனக்கல் கூட்டுக் குடிநீர் மூன்றாம் கட்டத் திட்டம்!

### அரசாணை வெளியீடு!

*சென்னை, அக்.2-*

*முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் உத்தரவின்படி, நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை சார்பில், ரூ.8,428.50 கோடி மதிப்பீட்டில், ஓசூர் மாநகராட்சி, தருமபுரி, கிருஷ்ணகிரி நகராட்சிகள், 16 பேரூராட்சிகள், 20 ஊராட்சி ஒன்றியங்களில் 6,802 குடியிருப்புகளில் வாழும் 38.81 இலட்சம் மக்களுக்கு பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்கிட, ஒகேனக்கல் கூட்டுக் குடிநீர் திட்டம் மூன்றாம் கட்டம் செயல்படுத்தபடவுள்ளது. அதற்கான அரசாணை வெளியிடப்பட்டுள்ளது.*

*அதன் விவரம் வருமாறு:-*

*தமிழ்நாட்டிலுள்ள அனைத்து மக்களும் பயன் பெறும் வகையில் குடிநீர்த் திட்டங்களை செயல்படுத்துவதற்காகவும், பாதாள சாக்கடைத் திட்டங்களை நிறைவேற்றுவதற்காகவும் 1971-ஆம் ஆண்டு முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களால் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் உருவாக்கப்பட்டது.*

*அரசு தற்போது, தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் மூலம் தமிழ்நாட்டின் 16 மாநகராட்சிகள், 72 நகராட்சிகள், 328 பேரூராட்சிகள் மற்றும் 47,980 ஊரகக் குடியிருப்புகளில் உள்ள 5.28 கோடி மக்கள் பயன் பெறும் வகையில் சராசரியாக நாளொன்றுக்கு 2,353 மில்லியன் லிட்டர் பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது.*

*தருமபுரி மற்றும் கிருஷ்ணகிரி மாவட்டங்களின் உள்ளூர் நீராதாரங்களில் புளோரைடு உப்புத் தன்மை நிர்ணயிக்கப்பட்ட அளவைவிட அதிகமாகயிருந்த நிலையில், அதன் பயன்பாட்டால் பொதுமக்கள் பல்வேறு உடல் நலபிரச்சனைகளைச் சந்தித்து வந்தனர்.*

*இந்த நிலையை மாற்றுவதற்காக, ஒகேனக்கல் குடிநீர் வழங்கல் மற்றும் புளோரைடு பாதிப்பு குறைப்புத் திட்டம் (முதல் மற்றும் இரண்டாம் கட்டம்), தருமபுரி மற்றும் கிருஷ்ணகிரி மாவட்டங்களைச் சார்ந்த ஓசூர் மாநகராட்சி, கிருஷ்ணகிரி, தருமபுரி நகராட்சிகள், 16 பேரூராட்சிகள் மற்றும் 10 ஊராட்சி ஒன்றியங்களில் உள்ள 6,758 ஊரகக் குடியிருப்புகளில் உள்ள 34.75 இலட்சம் மக்கள் பயன்பெறும் வகையில் ரூ.1928.80 கோடி மதிப்பீட்டில் செயல்படுத்தப் படதிட்டமிடப்பட்டது.*

*முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் இத்திட்டத்திற்காக ஜப்பான் நாடு சென்று, ஜப்பான் பன்னாட்டு கூட்டுறவு நிறுவனத்தினிடம் நிதி உதவி பெற்றுவந்தார்கள். அந்த நிதி உதவியின் துணை கொண்டு திட்டம் வடிவமைக்கப்பட்டது. அன்றைய தமிழ்நாடு முதலமைச்சர் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களால் 26.02.2008 அன்று தருமபுரியில் அடிக்கல் நாட்டப்பட்டது. தற்போது இத்திட்டத்தின் மூலம் நாளொன்றுக்கு நபர் ஒருவருக்கு 30 லிட்டர் வீதம் 145.00 மில்லியன் லிட்டர் குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது.*

*முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் தருமபுரி மற்றும் கிருஷ்ணகிரி மாவட்டங்களில் உள்ள மாநகராட்சி மற்றும் நகராட்சிகளுக்கு வழங்கப்படும் குடிநீரின் அளவினை நாள் ஒன்றுக்கு நபர் ஒருவருக்கு 135 லிட்டர் வீதமும், பேரூராட்சிகளுக்கு 70 லிட்டர் வீதமும் மற்றும் ஊரகப் பகுதிகளுக்கு 55 லிட்டர் வீதமும், உயர்த்தி வழங்கும் வகையில், 304.83 மில்லியன் லிட்டர் குடிநீர் வழங்கும் பொருட்டு, காவிரி ஆற்றினை நீராதாரமாகக் கொண்ட ஒகேனக்கல் கூட்டுக் குடிநீர் திட்டம்3 ஆம் கட்டம் செயல்படுத்தபடும் என்று அறிவித்தார்கள்.*

*அதன்படி, இத்திட்டத்திற்கு தேவையான நீரினை காவிரியாற்றில், ஒகேனக்கலில் அமையவிருக்கும் தலைமையிடத்திலிருந்து, யானைபள்ளம மற்றும் கனவாய் நீருந்து நிலையங்களின் வழியாக, 20.20 கி.மீ தொலைவில் பருவதனஹள்ளி கிராமத்தில் அமைக்கப்பட்டுள்ள சுத்திகரிப்பு நிலையத்தில் 242.50 மில்லியன் லிட்டர் நீர் சுத்திகரிக்கப்படவுள்ளது.*

*பின்னர், பருவதனஹள்ளியில் அமையவுள்ள 157.25 இலட்சம் லிட்டர் நீர் சேமிப்பு தொட்டியிலிருந்து, குழாய்கள் மூலம் 32 அழுத்த விசைத்தொட்டிகள் (BREAK PRESSURE TANK), 324 முதன்மை சமநிலை நீர்த்தேக்க தொட்டிகள் (MASTER BALANCING RESERVOIR), மற்றும் 598 தரைமட்ட தொட்டிகளில் (SUMP) நீர் சேகரிக்கப்படும். அங்கிருந்து தருமபுரி மற்றும் கிருஷ்ணகிரி மாவட்டங்களில் உள்ள நகர்ப்புர மற்றும் ஊரக பகுதிகளில் 1009 மேல்நிலை நீர் தேக்க தொட்டிகள் அமைக்கப்பட்டு; அதன் மூலம் குடிநீர் விநியோகம் செய்யப்படவுள்ளது.*

*இத்திட்டத்திற்கான விரிவான திட்ட மதிப்பீடு ரூ.8428.50 கோடி. இதில், ஊரக பகுதிகளுக்கான ஒன்றிய அரசின் பங்களிப்புத் தொகை ரூ.2,283.40 கோடி, மாநில அரசின் மற்றும் தொழில்துறை பங்களிப்புத் தொகை ரூ.1761.00 கோடியாகும்.*

*ஊரக, நகர்ப்புர பகுதிகளுக்கான மாநில அரசின் பங்களிப்புத் தொகையான ரூ.4384.10 கோடிக்கு வெளிப்புற நிதி உதவி மூலம் நிதி பெறுவதற்காக ஒன்றிய அரசின் பொருளாதார விவகாரங்களுக் கான துறையால் ஒப்புதல் அளிக்கப்பட்டு, ஜப்பான் பன்னாட்டு நிதி உதவி பெறப்படவுள்ளது. 11 தொகுப்புகளாக செயல்படுத்தப்படவுள்ள இத்திட்டத்தின் முதல்கட்டமாக தொகுப்பு2A மற்றும் திட்ட மேலாண்மை ஆலோசகருக்கான ஒப்பந்தப்புள்ளி கோரகொள்கை அளவில் ஒப்புதல் அளித்து அரசாணை வெளியிடப்பட்டுள்ளது.*

*இந்த ஒக்கேனக்கல் கூட்டுக் குடிநீர் திட்டம் 3ஆம் கட்டம் செயல்படுத்தப்படுவதன் மூலம், ஓசூர் மாநகராட்சி, தருமபுரி, கிருஷ்ணகிரி நகராட்சிகள், 16 பேரூராட்சிகள் மற்றும் 20 ஊராட்சி ஒன்றியங்களில் உள்ள 6,802 ஊரக குடியிருப்புகளைச் சார்ந்த 38.81 இலட்சம் மக்களுக்கு போதுமான அளவு குடிநீர் வழங்கப்படும்.*

*தமிழ்நாட்டில் தொழில்துறையில் வேகமாக வளர்ந்து வரும் நகரங்களில் ஒன்றான ஓசூர் மாநகராட்சி மற்றும் அதன் சுற்றுப்பகுதிகளில் வசித்து வரும் ஆயிரக்கணக்கான மக்களுக்கு வேலைவாய்ப்புகளை வழங்கக்கூடிய தொழில் நிறுவனங்கள் வளர்ச்சியடையவும் பெரிதும் உதவும்.*



கிளாம்பாக்கம், கலைஞர் நூற்றாண்டு பேருந்து முனையத்தில், அமைச்சர் சா.சி.சிவசங்கர் விழாக் கால தொடர் விடுமுறையினை முன்னிட்டு, ஏற்பாடு செய்யப்பட்டுள்ள சிறப்பு பேருந்துகள் இயக்கம் குறித்து உயர் அலுவலர்களுடன் கலந்தாலோசனை செய்தார். உயர் அதிகாரிகள் உடனிருந்தனர்.